

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.6.2023) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான அமெரிக்க நாட்டுத் தூதர் எரிக் கர்செட்டி அவர்கள் (Mr. Eric Garcetti) சந்தித்துப் பேசினார்.

# வங்காளதேசத்தில் நிலநடுக்கம்!

டாக்கா, ஜுன் 17 -

வங்காளதேசத்தில் நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் அது அசாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் உணரப் பட்டது.

வங்காள தேச நாட்டில் நேற்று காலை 10.16 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவில் 4.8 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அதிர்ந்தன.

நிலநடுக்கத்தால் அச்சமடைந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

இந்த நிலநடுக்கம் அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களிலும் உணரப்பட்டது.

அசாம் தலைநகர் கவுகாத்தி உள்ளிட்ட நகரங்களிலும் நில அதிர்வு உணரப்பட்டது.

மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன், எம்.பி, - வெற்றி அழகன்,எம்.எல்.ஏ. முன்னிலை:

# வில்லிவாக்கம் மேற்கு பகுதியில், மாவட்ட இளைஞரணி சார்பில் மாபெரும் இரத்ததான முகாம்!

## துவக்கி வைப்பவர் டாக்டர்.கனிமொழி, என்.வி.என்.சோமு,எம்.பி, தலைமை ஜெ.பாலமுருகன்

சென்னை, ஜுன்.17-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் மாவட்ட இளைஞர் அணி சார்பில் கலைஞர் 100, 5வது நிகழ்ச்சியாக “இரத்தம் கொடுப்போம் - நித்தம் உழைப்போம்” என்ற தலைப்பில் மாபெரும் இரத்ததான முகாம் 18.06.2023, ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில், சென்னை, வில்லிவாக்கம், சிட்கோ நகர், இராஜராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்முகாமில் மாவட்ட இளைஞரணி, துணை அமைப்பாளர்ஜெ.பாலமுருகன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர் - அ.வெற்றி அழகன், பகுதிக்கழக செயலாளர்கள் - கூ.பி.ஜெயின், வே.வாசு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் - சி.மகேஷ்குமார், டி.வி.செம்மொழி, எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்,எம்.சி., வானவில் விஜய், பாக்ஸர் வி.எஸ்.மதன் முன்னிலை வகிக்க, மாவட்ட துணை அமைப்பாளர்கள் - டி.லோகேஷ், கே.கோகுல், ஆர்.எஸ்.சித்திக், பி.ஜெகதிஷ், பகுதி அமைப்பாளர்கள் - வி.ஜெ.பிரபு, ம.ஜெகதீஸ்வரன், க.மணிகண்டன், டி.கே.நல்லரசு, க.கமலக்கண்ணன், க.சிலம்பரசன், எஸ்.மோகன்ராஜ், சி.எம்.பாரதி, ஏ.வி.ஜான் பால், டிஜிட்டல் ஜி.சுதாகர், எஸ்.ராஜா, ஆர். சீனிவாசன் வரவேற்கின்றனர்.


இம்முகாமை டாக்டர் கனிமொழி, எஸ்.வி.என். சோமு, எம்.பி., துவக்கி வைக்கிறார்கள். மேலும், இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி,எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல், ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

94வது வட்ட கழக செயலாளர் சிட்கோ சேகர் நன்றி கூறுகிறார்.










கலைஞர் 100 – 4

மாற்றத்தின் அரும் தலைவர்!
மகத்தான பெரும் கலைஞர்!!

நாள் : 17.06.2023 சனிக்கிழமை மாலை 6.00 மணி
இடம் : ராஜா அண்ணாமலை மன்றம், பாரிமுனை.

தலைமை
டி.சதீஷ்குமார்
59வது வட்ட கழக செயலாளர்

முன்னிலை
திரு. பி.கே.சேகர்பாபு
மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் – இந்து சமய அறநிலையத்துறை
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

திரு. தயாநிதிமாறன் எம்.பி
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்

எஸ்.முரளி எஸ்.இராஜசேகர்
பி.ஸ்ரீராமுலு எம்.சி கே.சரஸ்வதி எம்.சி

வாழ்த்துவோர்
கவிப்பேரரசு வைரமுத்து
முனைவர் சாரதா நம்பி ஆரூரன்
திரு. மதுக்கூர் ராமலிங்கம்

நன்றியுரை
மே.ஜனார்த்தனன்
பகுதி அவைத் தலைவர்
சேப்பாக்கம் வே.பிரபாகரன்
59 அ வட்ட கழக செயலாளர்

அன்புடன் : 59வது வட்டம் – துறைமுகம் மேற்கு பகுதி
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க